திருப்பூரில் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள்

*64 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் நகரிலுள்ள தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் மேலும் 60 வீடுகள் கட்டும் திட்டம் துவக்கப்பட்டு விட்டதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை முடிவடையும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) திருப்பூர் நகரில் உள்ள தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்காக ஏற்கனவே 60 சிறு வீடுகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினரால் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. மேலும் 108 சிறு வீடுகள் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் (Subsidised Industrial Housing Scheme) கட்டுவதற்கான திட்டம் ஒன்று ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது. அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தவுடன் தமிழ்நாடு அரசு வீட்டு வசதி வாரியம் ஒரு ஆண்டிற்குள் இத் திட்டத்தைப் பூர்த்தி செய்துவிடும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நகரில் ஏறத்தாழ 10 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 60 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாகவும், மேலும் 108 வீடுகள் கட்ட ஒரு திட்டம் அரசின் பரிசிலனையில் இருப்பதாகவும் சொன்னார்கள். மேற்கொண்டு 700 வீடுகள் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது திட்டத்தில் இருக்கிற 108 வீடுகளுக்கான உத்தரவு பெற்ற பிறகு அடுத்தாற்போல் மேலும் வீடுகளைக் கட்ட உத்தரவைப் பெற முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Water Supply for Madhavaram Milk Project

*80 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the steps taken to secure protected water supply at Madhavaram Milk Project?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாதவரம் பால் திட்டத்திற்குத் தேவையான நீர், பண்ணையில் உள்ள கிணறுகளிலிருந்தும், பஞ்செட்டியிலுள்ள துளைக்கிணறுகளிலிருந்தும் வழங்கப்படுகின்றது. இப்பண்ணையில் இந்த நீரில் குளோரின் மருந்து சேர்க்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்தப் பால் பண்ணையில் பால் பாட்டில்கள் சரியாகக் கழுவப்படாத காரணத்தால் பால் திரிந்து போவதாக அரசிடம் குறைகள் ஏதாவது கூறப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறைகள் ஏதும் இப்போது இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: பேரவைத் தலைவரவர்களே, மாதவரம் பால் பண்ணையிலிருந்து அனுப்பப்படுகின்ற பால துற்நாற்றம் வீசுகின்றது என்றும், அது ஏன் என்று கேட்டால், பல ஊர்களிலிருந்து வருகின்ற பாலையெல்லாம் ஒன்றாகச் சேர்ப்பதால்தான் எனறும் சொல்கிறார்கள். இந்தக் குறையைப் போக்க, பற்றாக்குறையை நீக்க, அரசு மற்றொரு பால் பண்ணையைத் தென் சென்னையிலே அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இதற்கான பதில் அடுத்த கேள்வியில் கொடுக்கப்பட்டுள்ளது.

Second Dairy Project for Madras

* 65 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a Second Dairy Project is to be started by the Government near Guindy; and

(*b*) if so, whether the site has been selected and when the project is likely to commence functioning?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) தென் சென்னையில் இரண்டாவது பாற்பண்ணை ஒன்றைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

(இ) பாற்பண்ணைக்கான இடம் இன்னும் தெரிந்தெடுக்கப்படவில்லை.

DR. H. V. HANDE: May I know from the Hon. Minister the total amount that is likely to be earmarked for this project, whether the financial commitment has already been gone through, whether the Government has already apportioned the necessary finance required for this, whether the land acquisition has taken place? Can the House get more details on this subject from the Hon. Minister? Is it a fact that the Government is also contemplating to improve the position of milk supply in the already existing Madhavaram milk colony by increasing the number of milch cattles and by increasing the facilities for milkmen there?

I would also like to know whether the Government is aware of the fact that a lot of milk is getting spoiled because good milk is being turned into toned milk by some scientific method which is in fact, in reality, becomes unnecessarily spoiled. Will the Government come forward to see that the public is spared from the toned milk? Will the Minister be able to enlighten us on these three points?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவரவர்களே, இரண்டாவது பால் பண்ணைத் திட்டம் ஒன்று தென் சென்னையில் அமைப்பதற்கான அனுமதி 11—3—1971-ல் வழங்கப்பட்டிருக்கிறது. மாதவரம் பால் பண்ணையில் போதுமான இட வசதி இல்லாத காரணத்தால், ஏனங்கள், பாட்டில்கள் ஆகியவற்றை ஏற்றிவரும் வண்டிகளை நிறுத்த இட வசதி இல்லாத காரணத்தால் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அதெல்லாவற்றையும்விட முக்கியமான காரணம், பால் விற்பனை அதிகமாகத் தென் சென்னையில்தான் இருக்